# தமிழ்நாட்டிற்கு 5 1/2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகளை ஈர்க்க வாய்ப்பு!

## சென்னையில் ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு’

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்!

### தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை! ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் பங்கேற்பு!

**சென்னை, ஜன. 7-**

**சென்னையில் இன்றும் நாளையும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது. தமிழ்நாட்டிற்கு ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க வழிவகுக்கவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்றும் நாளையும், உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டிற்கு ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கான முதலீடுகளை ஈர்க்க வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இன்று காலை 10 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடங்குகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து தொடக்க உரையாற்றுகிறார்.

ஒன்றிய தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகிறார்.

தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா வரவேற்புரை ஆற்ற உள்ளார்.

இந்த மாநாட்டில் தொழில்கள் அடிப்படையிலான பல்வேறு தனித்தனி அமர்வுகள் நடத்தப்படுகின்றன. ஜவுளி, காலணி தொழில்கள், மின்சார வாகனங்கள், வேளாண் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு அமர்வுகள் 2 நாட்களும் நடத்தப்பட உள்ளன.

இந்த மாநாட்டின் இரண்டாம் நாளான நாளைய தினம் (ஜனவரி 8ம் தேதி) பல்வேறு நாடுகளின் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளன. சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், முன்னிலையில், தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி மையம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து நாளை மாலை உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஆற்றுகிறார்.

இதனிடையே முதலமைச்சர் அவர்கள் விடுத்த சமூக வலைதள பதிவில், “தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடு, பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது” என்று குறிப்பிட்டுள்ளார்.

“30,000க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன், எங்கள் பிரச்சாரங்கள், Titans of TamilNadu மற்றும் ஒரு டிரில்லியன் பரிவர்த்தனை கனவு ஆகியவை பரவலான உற்சாகத்தைத் தூண்டியுள்ளன” என்றும் தெரிவித்துள்ளார்.

**தமிழ்நாட்டின் தொழில் வளத்தை இம்மாநாடு பறைசாற்றும்!**

“உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 450க்கும் மேற்பட்ட பன்னாட்டுப் பிரதிநிதிகள், 170 உலகப் புகழ் பெற்ற பேச்சாளர்கள் மற்றும் 50 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதுடன், தமிழ்நாட்டின் தொழில்வளத்தை இம்மாநாடு பறைசாற்றும்” என்றும் தெரிவித்துள்ளார். 26 சிந்தனை தலைமை அமர்வுகளை வரிசைப்படுத்தியுள்ளோம். குறு, சிறு தொழில்துறைக்கான அரங்குகள், தமிழ்நாடு சுற்றுச்சூழல் அமைப்பு அரங்கு, பன்னாட்டு அரங்குகள் மற்றும் ஸ்டார்ட் அப் தமிழ்நாடு அரங்கு ஆகியவை உள்ளன. பிரதிநிதிகள், மாநிலத்தின் தொழில்துறை அதிசயத்தைக் காணவும் வணிக ஒத்துழைப்புகளை வளர்க்கவும் ஒரு அருமையான வாய்ப்பை வழங்குகிறது” என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டின் தொழில்துறை மரபைக் கொண்டாடுவதிலும், நமது மாநிலம் வழங்கும் அபரிமிதமான ஆற்றலைப் பயன்படுத்துவதிலும் எங்களுடன் சேருங்கள் என்று தொழில்துறையினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை சுமார் 250 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 3 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 4 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது.

**தமிழ்நாட்டை தொழில் மையமாக்க உந்துவிசையாகச் செயல்பட்டு வருகிறது!**

தி.மு.க. ஆட்சி அமையும்போதெல்லாம், தமிழ்நாட்டை தொழில் மையமாக்க உந்து விசையாகச் செயல்பட்டு



வருகிறது. தொடக்கத்தில் தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் தொழிற்பேட்டைகள் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டன. 1996ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த ஆட்சியில், வாகனத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு வரத்தொடங்கின.

கொல்கத்தா, மும்பை போன்ற நகரங்களே வாகன உற்பத்தியின் மையமாக இருந்த நிலை மாறி, சென்னையை அடுத்த திருப்பெரும்புதூர் பகுதி, ‘தென்னிந்தியாவின் டெட்ராய்டு’ என்று போற்றப்படத்தக்க வகையில், வாகன உற்பத்தி மையமாகவும், உதிரி பாகங்கள் தொழிற்சாலை மையமாகவும் மாறியது.

இதேபோன்று, தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பப் புரட்சியும் தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான் ஏற்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, உருவாக்கப்பட்ட ‘டைடல்’ பார்க்தான், இன்று ராஜீவ் காந்தி சாலையில் சிறுசேரி வரை தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறைந்து காணப்படுவதற்கு விதையாக அமைந்தது. எனின் அது மிகையல்ல.

இடையில் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தொழில் வளர்ச்சி தொய்வடைந்திருந்த நிலையில், 2021ல் தி.மு.க. ஆட்சி அமைந்த உடனேயே, தமிழ்நாட்டை தொழில்வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டார்கள்.

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு லட்சம் கோடி டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

அதிக முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்ற, முதல் ஓராண்டில் உலகையே ஆட்டிப் படைத்த கொரோனா பரவலையும் சமாளித்து 2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்குத் தொழில் முதலீடுகளை ஈர்த்தது. இதன்மூலம் 3 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பலனடைந்தனர்.

**அதிக முதலீடுகள் குவியும் மாநிலமாக தமிழ்நாடு!**

இதனால், இந்தியாவில் அதிக முதலீடுகள் குவியும் மாநிலத்தில் ஒன்றாக தமிழ்நாடு உருவெடுத்தது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, தொழில்துறையில் தமிழ்நாடு புரட்சி செய்து வருவதாக ஒன்றிய அரசே பாராட்டுத் தெரிவித்தது.

இந்தியாவில் எளிதாக தொழில் செய்யக்கூடிய மாநிலங்களின் பட்டியலில் 14வது இடத்தில் இருந்த தமிழ்நாடு, தி.மு.க. ஆட்சிக்கு வந்த ஒரே ஆண்டில் 3வது இடத்திற்கு முன்னேறியது. தற்போது முன்னணி மாநிலமாக உள்ளது தமிழ்நாடு..

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கிவரும் தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, தானியங்கி வாகனங்கள், ஜவுளி, காலணி மற்றும் தோல்பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வான்வெளி மற்றும் பாதுகாப்பு என பல்வேறு வகையான தொழில்களை நிறுவிட ஊக்கமளிப்பதன் மூலம், முதலீடுகள் மேற்கொள்வதற்கு உகந்த மாநிலமாக தொடர்ந்து நிலைநிறுத்திக் கொண்டு வருகிறது.

“எல்லோருக்கும் எல்லாம்” என்ற அடிப்படையில், செயல்பட்டு வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தொழில் வளர்ச்சி என்பது குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டுமல்லாமல், அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலாக கிடைக்க வேண்டும். குறிப்பாக தென் மாவட்டங்களிலும், பின்தங்கிய மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதில், கவனம் செலுத்தி வருகிறது.

பெண்களுக்கும் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியாக உள்ளார்.

**முதல்வரின் சீரிய நடவடிக்கைகளால் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு!**

முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளால் தொழில் வளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது தமிழ்நாடு.

இந்திய அளவில் ஏற்றுமதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு, மின்னணுவியல் ஏற்றுமதியிலும் முதல் இடத்தில் உள்ளது. மேலும், அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் மற்றும் பணியாளர்களைக் கொண்ட மாநிலங்களில் முதலிடத்திலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில், அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்திலும் உள்ளது

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, உள்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக உள்ளதால் தி.மு.க. ஆட்சியில், தொழில் முதலீடுகள் குவிந்து வருகின்றன

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை சுமார் 250 ஒப்பந்தங்கள் மூலம் சுமார் 3 லட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. 4 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதற்கெல்லாம் மணிமகுடமாக, ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு’ சென்னை - நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்றும் நாளையும் (ஜன. 7, 8) நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 35க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டிற்கு ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கான முதலீடுகளை ஈர்க்க வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

2030ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார மாநிலம் என்ற இலக்கை அடைகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை.

---

### ஓய்வூதியதாரர்கள் – குடும்ப ஓய்வூதியதாரர்கள் –

## அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை!

### அதிகபட்சமாக ரூபாய் 3000 வரை பெறுவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

2022-2023ஆம் ஆண்டிற்கான ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு பணியாளர்களுக்கான மிகை ஊதியம் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு :

மக்கள் நலனுக்காக அரசு வகுக்கும் பல்வேறு திட்டங்களுக்கு, அச்சாணியாக விளங்கும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு எதிர்வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி,

**1. ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவைச்** (C & D Group) **சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.**

**2. தொகுப்பூதியம், சிறப்புக் கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள், மற்றும் 2022-2023ம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழு நேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்.**

**3. "சி" மற்றும் "டி" பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கும் ரூபாய் 500 பொங்கல் பரிசாக வழங்கப்படும்.**

மேற்கூறிய மிகை ஊதியம்/ பொங்கல் பரிசு வழங்குவதன் மூலம் அரசிற்கு 167 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

---

### தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு

## 2024 ஜனவரி 21 (ஞாயிறு) அன்று நடைபெறும்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

"மிக்ஜாம்” புயல் மற்றும் தென் மாவட்டங்களில் பெய்த அதிகனமழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட **“தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு”, வருகிற 21.01.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சேலத்தில் நடைபெறும்.**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 06.01.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.